ாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, பஞ்சாயத்து பேரூராட்சி, மற்றும் நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்துக்கும் பொருந்தும்.

நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவின் அதிகார வரம்பை உயர்த்துதல்.

0 3822—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது அமுலில் உள்ள நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவுக்குள்ள அதிகார வரம்பை உயர்த்த வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவென்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகராட்சி மற்றும் நகரியங்களில் வரி மேல் முறையீட்டுக் குழுவிற்கு செய்யப்படும் மனுக்கள் மீது, உயர்த்தப்பட்ட வரியில் 5 விழுக்காட்டுக்குக் கூடுதலாக வரி குறைப்பு செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்கி தற்போது அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. ஒங். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், டேக்சேஷன் அப்பீல் கமிட்டி', அதாவது வரிவிதிப்புக் கமிட்டி என்று இருக்கிறதே, அதனுடைய அதிகாரம் பற்றி அமைச்சர் சொன்னார்கள். ஆனால் வரி போடுகிற அதிகாரம் கமிஷனருக்கு இருக்கிறது. வரி போடுவதைப் பரிசீலனை செய்வதற்கு முறையீட்டுக் கமிட்டிக்கு நாம் அப்பீல் செய்யும்

போது, அது சரியாகப் பரிசீலனை செய்யவில்லை என்றால், அதற்கு 'பனிஷ்மெண்ட்' கொடுக்க அதிகாரம் வழங்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, யாராவது புகார் செய்வார்களேயானால், பரிசீலிக்கப்படும்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த வரி மேல் முறையீட்டுக் குழுவிலே, இப்போது உறுப்பினர்களாக உள்ளவர்கள் யார், யார்? இந்த வரி முறையீட்டுக் குழுவில் குறை ஏற்படுமானால், மேல் முறையீட்டுக்கு வழக்குமன்றத்திற்குச் செல்ல அதிகாரம் உண்டா? இதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடமளிக்க அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

9-15 மணி.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நகராட்சி மன்றத்திற்கு ஒவ்வொரு அப்பீல் குழு இருக்கிறது. அது, எது, எது என்ற விவரம் என்னிடம் இப்போது இல்லை. அவ்வளவும் அறி விக்கவும் இயலாது. கோர்ட்டுக்குப் போவது என்பது அவர் களுடைய தனிப்பட்ட உரிமை, அதில் அரசு தலையிடாது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி வரி மேல் முறையீட்டுக் குழுவில் நகர்மன்றத் தலைவர், அந்தக் குழுவின் தலைவராகவும், நான்கு நகர்மன்ற உறுப்பினர்கள், உறுப்பினர்களாகவும் இருந்து அப்பீலை எடுத்துக்கொள் கிறார்கள்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அந்த வரி மேல் முறையீட்டுக் குழு என்பது தொடர்ச்சியாக் மாதாமாதம் கூடுவதில்லை. ஆயிரக்கணக் கான அப்பீல்கள் வந்த பின்னால்தான், அல்லது நூற்றுக் கணக்கிலே சேர்த்து வைத்து, எப்போதாவது ஒரு நாள் கூடுவது என்ற ஒரு நிலை இருக்கிற காரணத்தால் பொது மக்கள் சில பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஆகவே, உடனுக்

குடன் ஐந்தோ பத்தோ வந்திருந்தால் கூட, மாதத்தில் ஒரு நாளோ அல்லது தேவையானால் இரண்டு நாட்களோ கட்டாயம் கூடவேண்டும் என்று ஏதாவது நிலையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு புகாரும் இதுவரை வரவில்லை. இருப்பினும் அவர்கள் கூட்டாகததினால் அதைப் பரிசீலிக்கமுடியவில்லை என்ற நிலையில்லாமல் உடனுக்குடன் கூட்டி பரிசீலிக்கின்ற வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தி தர இந்த அரசு நிச்சயம் முயற்சிக்கும்.

நகரப் பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள்.

* 4002.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நிலக்கோட்டை, வத்தலக்குண்டு பேரூராட்சிகளை நகரப் பேரூராட்சிகள் என அறிவித்துள்ளதால், பேரூராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய உதவித் தொகைகள் இவைகளுக்குக் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்நிலையை மாற்றி, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தவும், மத்திய உதவிகள் கிடைக்கவும் வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நடப்பாண்டு முதல் தேசிய ஊரக கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஜவஹர் மற்றும் வேலை வாய்ப்புத் உறுதியளிப்புதிட்டம் என்ற புதிய திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.